# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1995/39 - 2016 දෙසැම්බර් මස 02 වැනි සිකුරාදා - 2016.12.02

*1995/39 ஆம் இலக்கம் - 2016 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 02 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (I)- பொது

## *அரசாங்க அறிவித்தல்கள்*

*ச.வ.பீ. 21/ 1978* (x)

**1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டம்**

25அ என்னும் பிரிவின் கீழான கட்டளை

*1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 25அ என்னும் பிரிவினால் எனக்குரித்தாக்கப்பட்டுள்ள தத்துவங்களின் பயனைக்கொண்டு உயர்கல்வி மற்றும் பெருந்தெருக்கள் அமைச்சர் லக்ஸ்மன் கிரிஎல்ல ஆகிய நான், மேற்சொல்லப்பட்ட சட்டத்தின் 70 இ எனும் பிரிவின் கீழ் அறிக்கை ஒன்றை பெற்றுக்கொண்டு 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க, கம்பனிகள் சட்டத்தின் கீழ் இலங்கையில் கூட்டிணைக்கப்பட்டதும் பதிவிலக்கம் PV 101137 இனைக் கொண்டதுமான எஸ் எல் ரி கெம்பஸ் (பிரைவெட்) லிமிட்டெட் கம்பனி தொடர்பில், இதற்கான I ஆம் அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட நிபந்தனைகளுக்கமைய, எந்தப் பட்டங்களின் சுருக்கீடுகள் இதற்கான II ஆம் அட்டவணையின் II ஆம் நிரலில் முறையான நேரொத்த பதிவுகளில் தரப்படுகின்றதோ அந்தப் பட்டங்கள் இதற்கான II ஆம் அட்டவணையின் I ஆம் நிரலில் குறித்துரைக்கப்பட்ட பட்டங்களை வழங்குவதற்கு இட்டுச் செல்கின்றதான, இதன்கண் உயர்கல்வியை அபிவிருத்தி செய்யும் நோக்கத்திற்காக பட்டம் வழங்கும் நிறுவகம் ஒன்றாக எஸ் எல் ரி கெம்பஸ் (பிரைவெட்) லிமிட்டெட்டை இக்கட்டளை மூலம் ஏற்றங்கீகரிக்கின்றேன்.*

***அட்டவணை I***

*நிபந்தனைகள்*

*எஸ் எல் ரி கெம்பஸ் (பிரைவெட்) லிமிட்டெட் ஆனது பின்வரும் பட்ட நிகழ்ச்சித் திட்டங்களுக்காக மாணவர்களை அனுமதிக்கின்றபோது, க. பொ. த (உயர்தர) பரீட்சையில் பௌதீக விஞ்ஞான பாடத்திட்டத்தில் ஒரே தடவையிலான அமர்வில் மூன்று சாதாரண சித்திகளை அல்லது பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் வழிகாட்டு நெறிகளின்படி அதற்கு சமமான ஆகக்குறைந்த நுழைவுத் தகைமைகளாகக் கொண்டிருத்தல் வேண்டும்.*

*இவ் அதி விசேட வர்த்தமானியை www.documents.gov.lk என்னும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

**அட்டவணை II**

| "நிரல் I<br>பட்டங்கள் | நிரல் II<br>பட்டத்துக்கான சுருக்கீடுகள் |
|---|---|
| இலத்திரனியல் மற்றும் வலுமுறைமைகளிலான பொறியியலில் கௌரவ விஞ்ஞான இளமாணி | பீ. எஸ். சி. கௌரவ பொறியியல் (இலத்திரனியல் மற்றும் வலு முறைமைகள்) |
| இலத்திரனியல் மற்றும் தொலைத்தொடர்புகளிலான பொறியியலில் கௌரவ விஞ்ஞான இளமாணி | பீ. எஸ். சி. கௌரவ பொறியியல் (இலத்திரனியல் மற்றும் தொலைத்தொடர்பு) |
| இலத்திரனியல் மற்றும் பொறியியல் முகாமையிலான பொறியியலில் கௌரவ விஞ்ஞான இளமாணி | பீ. எஸ். சி. கௌரவ பொறியியல் (இலத்திரனியல் மற்றும் பொறியியல் முகாமை) |

லக்ஸ்மன் கிரிஎல்ல,
உயர்கல்வி மற்றும்
பெருந்தெருக்கள் அமைச்சர்.

கொழும்பு,
*2016.11.28.*

*12 - 726*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.